

சேலத்தில் நடைபெறவுள்ள கழக இளைஞர் அணியின் 2வது மாநில மாநாட்டுக்கு இளைஞர்களை தயார்படுத்தும் வகையில் புதுக்கோட்டை வடக்கு மற்றும் தெற்கு மாவட்ட இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டம் நேற்று முன்தினம் புதுக்கோட்டையில் நடைபெற்றது. கழக இளைஞர் அணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றிய இக்கூட்டத்தில் அமைச்சர்கள் எஸ்.இரகுபதி, சிவ.வீ. மெய்யநாதன், அன்பில் மகேஷ் பொய்யாமொழி, மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லபாண்டியன், இளைஞர் அணி துணைச் செயலாளர் இளையராஜா, சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் முத்துராஜா, இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர்கள் சு.சண்முகம், மணிராஜன் மற்றும் துணை அமைப்பாளர்கள் உள்பட பலர் கலந்துகொண்டனர்.



கழக இளைஞரணி செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், மறைந்த கழக மாநில இளைஞரணி துணைச் செயலாளர், முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் அன்பில் பொய்யாமொழி அவர்களின் 24ஆம் ஆண்டு நினைவுநாளையொட்டி திருச்சி தெற்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்த அவரின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில் திருச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் – அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி போக்குவரத்துத்துறை அமைச்சர் சிவசங்கரன், கலந்து கொண்டார்கள். மாவட்டக் கழகச் செயலாளர்கள் தியாகராஜன், வைரமணி, சட்ட மன்ற உறுப்பினர் கதிரவன், மாநகராட்சி மேயர் மு.அன்பழகன், மாநகரக் கழகச் செயலாளர் மதிவாணன், மாவட்ட, கழக நிர்வாகிகள் கே.என்.சேகரன், வண்ணை அரங்கநாதன், கோவிந்தராஜ், துணை மேயர் திவ்யா, மாவட்ட, மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## 101வது வட்டத்தில் காலை உணவு திட்டம்!

சென்னை, ஆக. 29 –

முதலமைச்சர் அவர்களின் காலை உணவுத் திட்டத்தினை அண்ணா நகர் வடக்கு பகுதி, 101 வது வட்டம், அமைந்த கரையில் உள்ள மஞ்சக் கொல்லை, சென்னை மாநகராட்சி துவக்கப் பள்ளியில் அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன் துவக்கி வைத்தார்.

இதில் ச.பரமசிவம், கார்த்திக் மோகன், மெட்டில்டா கோவிந்தராஜ், சி.பி. திருமலை, க.கோவிந்தராஜ் மற்றும் மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## உலக தடகள சாம்பியன்ஷிப் போட்டி!
# வரலாற்றுச் சாதனை புரிந்த இந்திய அணியைப் போற்றுகிறேன்!
## முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

சென்னை, ஆக. 29 -

உலக தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் வரலாற்றுச் சாதனை புரிந்துள்ள இந்திய ஆடவர் தொடர் ஓட்ட அணியைப் பாராட்டி முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் செய்தி வெளியிட்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு :-

உலக தடகள சாம்பியன்ஷிப்பில் வர**லாற்றுச் சாதனை புரிந்துள்ள இந்திய ஆடவர் 4 x 400 தொடர் ஓட்ட அணியினரைப் போற்றுகிறேன்.**

**ஆசிய அளவிலான புதிய சாதனையைப் படைத்து, ஓட்டப்பந்தயத்தில பல முன்னணி நாடுகளை வீழ்த்தி, இறுதிப் போட்டிக்குள் நமது அணியினர் நுழைந்துள்ளனர்.**




**இதற்காக, முகம்மது அனஸ் யாஹியா, அமோஜ் ஜேக்கப், முகம்மது அஜ்மல் மற்றும் நம் தமிழ்நாட்டைச் சேர்ந்த வீரரான ராஜேஷ் ரமேஷ் ஆகிய நால்வருக்கும் அவர்களது அபாரமான ஓட்டத்துக்காகப் பாராட்டுகள்.**

இவ்வாறு அப்பதிவில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## உன்னதத் திட்டம் மலர்ந்தது உலகமே நெகிழ்ந்து... மகிழ்ந்தது..!



தமிழ்நாடு வரலாற்றில் ஒரு பொன்னாள் இந்த
தரணிக்கே வேறேது நன்னாள்...?
அமுதாய் பிள்ளைகட்கு காலை உணவு
அள்ளியே வழங்கிய திருநாள்...

பதினேழு இலட்சம் பிள்ளைகள்
பசியாற்றல் இமாலய சாதனை..
இதுவரை ஏழையர் பட்டதுயர்
இல்லாது ஒழிந்தது வேதனை...

இதுபோல் ஏற்றமிகு திட்டம்
இந்தியாவில் இதுவரை வந்ததில்லை – இந்தப்
புதுமையை எண்ணுகின்ற போது
பூக்கின்ற புத்துணர்வு கொஞ்சமில்லை...

வயிற்றுப்பசி எரிகின்ற நெருப்பென்று
வள்ளலார் உரைத்ததை நினைந்து...
வையகமே பாராட்டும் வகையில்
வந்தது முதல்வர்மனம் கனிந்து...

காமராசர் விண்ணிருந்து வாழ்த்துகிற...
கலைஞரும் எம்.ஜி.ஆரும் போற்றுகிற
தேமதுரக் காட்சியைக் காணுகிறேன்...
திசையெட்டும் மலர்களைத் தூவுகிறேன்..

உலகமே அண்ணாந்து பார்க்கின்ற
உன்னதத் திட்டத்தைப் போற்றிடுவோம் – நாமும்
வலம் வந்து உழைக்கின்ற தளபதிக்கு
வாழ்த்துக் கொடியினை ஏற்றிடுவோம்!



–கவிஞர் இரவிபாரதி...

## சென்னை நீச்சல் குளத்தில் மூழ்கி
# உயிரிழந்த சிறுவனின் குடும்பத்திற்கு ஆறுதல் - நிதியுதவி!
## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஆக. 29 –

சென்னை நீச்சல் குளத்தில் மூழ்கி உயிரிழந்த சிறுவனின் குடும்பத்திற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆறுதல் கூறியதுடன் நிதி உதவியும் வழங்கிட உத்தரவிட்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு வருமாறு:–

சென்னை மெரினா கடற்கரையில் உள்ள அண்ணா நீச்சல் குளத்தில் 26.8.2023 அன்று மதியம் குடும்பத்தினருடன் நீந்துவதற்கு வந்த பள்ளிக்கரணை பகுதியைச் சேர்ந்த அனிருத் என்ற ஐந்துவயது சிறுவன் எதிர்பாராத விதமாக நீரில் மூழ்கி உயிரிழந்தார் என்ற வேதனையான செய்தியினைக் கேட்டு மிகுந்த வருத்தமடைந்தேன்.

சிறுவனின் இறப்பு குறித்து துறை ரீதியான விசாரணை நடத்திஉரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள அலுவலர்களை அறிவுறுத்தியுள்ளேன்.

சிறுவன் அனிருத்தை இழந்துவாடும் அவரது பெற்றோருக்கும், உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது குடும்பத்தினருக்கு மூன்று இலட்சம்ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

## நெல்லை மத்திய மாவட்டக் கழகக் கூட்டம்!
### மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் சிறப்புரை!

*நெல்லை. ஆக. 29-*

*நெல்லை மத்திய மாவட்டக் கழக அவசர செயற்குழு கூட்டம் மத்திய மாவட்டக் கழக அலுவலகத்தில் 26 ந்தேதி மாலை 6 மணிக்கு மாவட்ட அவைத் தலைவர் முருகன் தலைமையில்,மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வட்டக் கழக செயலாளர்களுடன் வாக்குசாவடி சீரமைத்தல் குறித்து கலந்தாலோசனை கூட்டம் நடைபெற்றது.இந்நிகழ்வில் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான் பங்கேற்று சிறப்புரையாற்றினார்.*

*நிகழ்வில் கழக தீர்மானக் குழு உறுப்பினர் சுப.சீதாராமன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பேச்சி பாண்டியன், மாவட்ட துணைச் செயலாளர்கள் கிரிஜா குமார், எஸ்.வி.சுரேஷ்,கே. டி.சி.தர்மன், மாநகரச் செயலாளர் சு.சுப்பிரமணியன், ஒன்றியச் செயலாளர்கள் கல்லூர் மாரியப்பன், அன்பழகன், அருள்மணி, பகுதி செயலாளர்கள் தச்சை சுப்பிரமணியன், நெல்லை நமச்சிவாயம் என்ற கோபி, பாளை அன்டன் செல்லதுரை, மேலப்பாளையம் துபாய் சாகுல், மாநகர துணைச் செயலாளர் அப்துல்கையூம், மாநகர பொருளாளர் பூக்கடை அண்ணாதுரை, வழக்கறிஞர் அணி காமினி தேவன், ராஜாமுகமது, கந்தசாமி, மணிகண்டன், வின்சர், அருள்ராஜ், கலை இலக்கியப் பகுத்தறிவு அமைப் பாளர் ராஜகுமாரி, மகளிர் தொண்டரணி அமைப்பாளர் அனிதா, ஆதிராவிடர் நலக் குழு அணி அமைப்பாளர் நவநீதன், மாவட்ட பிரதிநிதிகள் சுரேஷ், கார்டன் சேகர, வட்டச் செயலாளர்கள் கல்யாணசுந்தரம், சடாமுனி, பத்மராஜ், பெர்க்மான்ஸ் பாஸ்கர், காஜா முகைதீன், சாகுல் ஹமீது, ஆறுமுகம், குமரேசன் பேபி கோபால்,செய்யது முகைதீன், தென்கரை முத்து, மாரிமுத்து, செல்வக்குமார், இசக்கி,பால்துரை, அந்தோணி, வேல்முருகன், ஜெயின் உசேன்,மேகை செல்வம் ஆகியோர் கலந்து கொண்டனர்.*

## ‘இந்திய இலக்கியச் சிற்பிகள்’ வரிசையில் ‘கலைஞர் மு.கருணாநிதி’ நூல்!
# கலைஞருக்குக் கடமையாற்றிய உங்களை வாழ்த்துகிறேன்!
## முனைவர் ம.இராசேந்திரனுக்கு கவிப்பேரரசு வைரமுத்து வாழ்த்து!

சென்னை, ஆக. 29 -

‘இந்திய இலக்கியச் சிற்பிகள்’ வரிசையில் மேனாள் துணைவேந்தர் முனைவர் ம.இராசேந்திரனின் கைவண்ணத்தில் ‘கலைஞர் மு.கருணாநிதி’ நூலை சாகித்ய அகாடமி வெளியிட்டுள்ளது.

இந்நிகழ்வையொட்டி, இந் நூலினை எழுதிய முன்னாள் துணைவேந்தர் முனைவர் ம.இராசேந்திரனுக்கு கவிப்பேரரசு வைரமுத்து எழுதிய வாழ்த்துக் கடிதத்தில், “படைப்பின் வழி, கலைஞரின் பன்முக அடையாளத்தை பறைசாற்றி, கலைஞருக்குக் கடமையாற்றிய உங்களை வாழ்த்துகிறேன்” என்று குறிப்பிட்டுள்ளார்.

மேனாள் துணைவேந்தர் முனைவர் ம.இராசேந்திரன் அவர்களுக்கு கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் எழுதியுள்ள வாழ்த்துக் கடிதம் வருமாறு:-

**அன்புத் துணைவேந்தர் அவர்களுக்கு,**

**‘இந்திய இலக்கியச் சிற்பிகள்’ வரிசையில் உங்கள் கைவண்ணத்தில் சாகித்ய அகாடமி வெளியிட்ட ‘கலைஞர் மு.கருணாநிதி’ நூல் படித்தேன்.**

**கலைஞரின் தவிர்க்க முடியாத பரிமாணங்களையெல்லாம் பதிவுசெய்திருக்கிறீர்கள்.**

**128 பக்கங்களில் சங்குக்குள் சமுத்திரத்தை அடக்கும் முயற்சி இது.**



**கலைஞரின் பரந்த படைப்பாளுமையை இதைவிடவும் இரத்தினச் சுருக்கமாக வடித்துவிட முடியாது.**

**கலைஞர்பால் பேரன்பும் அவர் படைப்புக்களை உள்வாங்கும் உளமும் நுண்மாண் நுழைபுலமும் மிக்கவர்க்கே அது சாத்தியம்.**

**உங்கள் அறிவின் உரத்துக்கும் ஆராய்ச்சித் திறத்துக்கும் இந்நூல் ஓர் இனிய சான்று.**

**இப்படைப்பின்வழி, கலைஞரின் பன்முக அடையாளத்தைப் பறைசாற்றிய தங்களைப் பாராட்டி மகிழ்கிறேன்.**

**கலைஞருக்குக் கடமையாற்றிய உங்களை வாழ்த்துகிறேன்.**

இவ்வாறு கவிப்பேரரசு வைரமுத்து, தனது வாழ்த்துக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.



திருச்சியில் நடைபெற்ற – கழக இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டத்தில் பங்கேற்ற கழக இளைஞர் அணிச் செயலாளரும் – இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள், உடல்நலம் பாதிக்கப்பட்டு திருச்சி – அப்போலோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள வெங்கடேஷ் குமாரை நேரில் சந்தித்து நலம் விசாரித்தார். திருச்சி தெற்கு மாவட்டச் செயலாளரும், பள்ளிக்கல்வித்துறை அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி உடனிருந்தார்.




ஈரோடு மாவட்டம் சென்னிமலை ஊராட்சி ஒன்றியம் வெ.குட்டபாளையம் ஊராட்சிக்குட்பட்ட அனைத்து மேல்நிலை குடிநீர் தொட்டிகளுக்கு ரூ.18.00 இலட்சம் மதிப்பீட்டில் தானியங்கி கட்டுப்பாட்டு கருவி பொருத்தும் பணியினை வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி துவக்கி வைத்தார். நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜகோபால் சுன்கரா, திட்ட இயக்குனர்/கூடுதல் ஆட்சியர்(வளர்ச்சி) மரு.மனீஷ், சென்னிமலை ஒன்றிய கழக செயலாளர் செங்கோட்டையன், ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் காயத்ரி இளங்கோ, மாவட்ட ஊராட்சி தலைவர் நவமணி உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் பலர் உள்ளனர்.



ஒட்டுமொத்த தமிழினத்தின் ஒப்பற்ற தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கேரள மாநிலத்தில் கேரள தி.மு.க. சார்பில் 1000 பேருக்கு ஓணம் பரிசு வழங்கும் நிகழ்ச்சி, இடுக்கி மாவட்ட கழக அலுவலகம் திறப்பு விழா மற்றும் கொடியேற்று விழாவில் தி.மு.க. தலைமை நிலைய செயலாளரும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய தலைவருமான பூச்சி எஸ்.முருகன் கலந்துகொண்டு பரிசுகளை வழங்கி அலுவலகத்தை திறந்து வைத்து கொடியேற்றினார். கேரள மாநில தி.மு.க. அமைப்பாளர் கே.ஆர்.முருகேசன் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் மாநில பொறுப்புக்குழு உறுப்பினர்கள் மோகன் தாஸ், ஜெயபால், ஸ்டீபன் ஆகியோர் முன்னிலை வகிக்க இடுக்கி வடக்கு மாவட்டச் செயலாளர் ஜனார்த்தனன் வரவேற்புரை நிகழ்த்த, இடுக்கி தெற்கு மாவட்டச் செயலாளர் கனி நன்றியுரை நிகழ்த்தினார். முன்னதாக கேரள மாநில இளைஞர் அணி அமைப்பாளர் பிரின்ஸ் ஊர்வலத்தை தொடங்கி வைத்தார். மாநில இளைஞரணி துணை அமைப்பாளர்கள் மது, விபின் முருகேசன், பிரவீன் ராஜ், முன்னாள் மேல்புறம் ஒன்றிய செயலாளர் சிற்றார் ரவிச்சந்திரன், ஜோஸ், தங்கச்சன், அம்முக்குட்டி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.